பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

சுடர்: 5 பிரமோதூத ஹூ ஆவணி மீ 22 உ வெள்ளிக்கிழமை (07-09-1990) ஹிஜ்ரி 1410 ஸபர் பிறை 17 கதிர்: 188

# முல்லைத்தீவு மோதலில் 36 புலிகள் வீரமரணம்!

யாழ்ப்பாணம், செப். 7

கடந்த சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் முல்லைத்தீவுப் பகுதியில் இலங்கை அரச படைகளுடன் நடந்த நேரடிமோதலில் விடுதலைப்புலிகள் இயக்கப் போராளிகள் 36 பேர் வீரமரணமடைந்தனர்.

விடுதலைப் புலிகளினால் முற்றுகையிடப்பட்டு புலிகள் வசம் வீழும் நிலையில் இருந்த முல்லைத்தீவு இராணுவ முகாமை மீட்பதற்கு அரச படைகள் முயன்றபோதே இந்த மோதல் ஏற்பட்டது.

சனிக்கிழமை காலை 5மணிக்கு ஐநூறுக்கும் அதிகமான துருப்புககள் கடல், ஆகாய மார்க்கமாக முல்லைத்தீவு கடற்கரையோரப் பகுதியான வட்டுவாவலில் தரையிறக்கப்

(3ஆம் பக்கம் பார்க்க)

## உலக திருச்சபை பிரதிநிதி யாழ். நகரில்

யாழ்ப்பாணம், செப். 7

அகில உலகத் திருச்சபை பெண் பிரதிநிதி ஒருவர் யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

இங்குள்ள நிலைமைகளை நேரில் அவதானித்துச் செல்லவே அவர் வந்திருப்பதாகவும், அரசு சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் குறித்தும் அவர் அறிந்து கொள்ள இருப்பதாகவும் அறியவந்தது. (ஒ-5)

## 15 வீத உணவுப் பொருள்களே கிளிநொச்சிக்குக் கிடைத்தன

யாழ்ப்பாணம், செப். 7

கிளிநொச்சி மாவட்டத்துக்கு கடந்த 85 நாட்களில் தேவையான அத்தியாவசிய பொருள்களில் 15வீதமான பொருள்களே அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது,

ஜூன் மாதம் 14 ஆம் திகதிக்கு பின்னர் கிளிநொச்சி மாவட்டத்துக்கு 250 மெற்றிக்தொன் உணவுப் பொருள்களே அனுப்பப்பட்டுள்ளன.

''ஒரு மாதத்துக்கு அந்த மாவட்டத்துக்கு 600 மெற்றிக் தொன் உணவுப் பொருள்கள் தேவை என்று அரசுக்கு தெரிவித்திருந்தோம். ஆனால் 250 மெற்றிக் தொன் மட்டுமே அனுப்பப்பட்டிருக்கிறது — இவ்வாறு கிளிநொச்சி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-3-7)

## வடக்கு - கிழக்குப் போரில் படையினர் 1,043 பேர் பலி

கொழும்பு, செப். 7

கடந்த ஜூன் மாதம் 11 ஆம் திகதியின் பின்னர் வடக்கு-கிழக்கு பகுதியில் ஆரம்பமான போரில் இது வரை ஆயுதப் படையினரும் பொலீஸாருமாக மொத்தம் ஆயிரத்து 43 பேர் உயிரிழந்தனர்.

பொலீஸாரும் படையினருமாக 1,010 பேர் காயமடைந்தனர்.

150 இராணுவத்தினர் இதுவரை கண்ணிவெடி, மிதிவெடிகளில் சிக்கி கால்களை இழந்துள்ளனர்.

இத்தகவலை பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்கா நேற்றுத் தெரிவித்தார். (ஒ-எ)

## மக்கள் வாழும் பகுதிகள் மீது குண்டு வீசுவதை நிறுத்துக!

### ஆளுநர் பர்னாலா வேண்டுகோள்

சென்னை, செப். 7

இலங்கை, வடக்குப் பகுதியில் பொதுமக்கள் வாழும் பகுதிகளில் அரசுப் படைகள் குண்டு வீசுவதை உடனடியாக நிறுத்த வேண்டும்.

தமிழ்நாடு ஆளுநர் சுர்ஜித் சிங் பர்னாலா நேற்று நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு பேசுகையில் முன் கண்டவாறு வேண்டுகோள் விடுத்தார்.

இலங்கையில் இருந்து தமிழ் அகதிகள் பெரும் எண்ணிக்கையில் வருவது தமிழக அரசுக்குக் கவலையை அளித்து வருவதாகவும் —

மாநிலத்திற்கு பொருளாதாரச் சுமையாக இது அமைந்துள்ளது என்றும்— ஆளுநர் பர்னாலா சொன்னார். (ஒ-எ)

## 50 லட்சம் ரூபா பணம் யாழ்ப்பாணம் வந்தது!

யாழ்ப்பாணம், செப். 7

யாழ். மாவட்டத்தில் பணப் புழக்கத்தை சீராக்கும் முயற்சியாக 50 லட்சம் ரூபா பணமாக யாழ். செயலகத்துக்கு கொழும்பில் இருந்து தருவிக்கப்பட்டிருக்கிறது.

வங்கிகள் செயற்படாததாலும், பொருள்களைக் கொள்வனவு செய்யும் வகையில் குடாநாட்டுப் பணம் வெளியிடங்களுக்குச் செல்வதாலும் இங்கு பணப் புழக்கம் பாதிக்கப்பட்டிருக்கிறது.

இதை அடுத்து அரச ஊழியர்களுக்கான சம்பளத்தை யாவது பணமாக வழங்க வேண்டும் என்று யாழ். அரச அதிபர் கோரிக்கை விடுத்திருந்தார்.

அதனையடுத்தே கப்பல் மூலமாக 50 லட்சம் ரூபா அனுப்பப்பட்டிருக்கிறது. இந்தப் . பணத்தில் சுகாதாரத் திணைக்களத்துக்கு 10 லட்சம் ரூபாவும், யாழ். செயலகத்துக்கு 40 லட்சம் ரூபாவும்

[ 3ஆம் பக்கம் பார்க்க]

## நெடுந்தீவு அகதிகள் தமிழகத்துக்கு

சென்னை, செப். 7

நெடுந்தீவைச் சேர்ந்த சுமார் 200 பேர் நேற்று இராமேஸ்வரம் போய்ச் சேர்ந்தனர் என்று சென்னையில் அரசு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஒ-எ)

## வெளிநாடுகளின் உதவி ஏதுமின்றி

# எதிரியின் ஆயுதங்களைப் பறித்து எதிரியோடு மோதுகின்றோம்!

### முல்லைத்தீவு யுத்தம் குறித்து புலிகள் அறிக்கை

யாழ்ப்பாணம், செப். 7

நாம் தனித்து — எந்த ஒரு நாட்டின் உதவியும் இன்றி — எதிரியின் ஆயுதங்களைப் பறித்து அவற்றைக்கொண்டே எதிரியுடன் மோதுகின்றோம்.

— இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைமைச் செயலகம் நேற்று முன்தினம் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறது.

''களம் பல கண்ட முல்லைத்தீவில்'' என்ற தலைப்பில் விடுக்கப்பட்ட இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;-

தமிழீழம் இன்று வித்தியாசமான, வேறுபட்ட ஒரு போராட்டத்தைச் சந்தித்துள்ளது.

1972 இல் ஆரம்பிக்கப்பட்டு 1983 வரை குறிப்பிட்ட சிறிய அளவிலான போராளிகளைக் கொண்டிருந்த எமது இயக்கம், இன்று பல்லாயிரக்கணக்கான போராளிகளைத் தன்னகத்தே கொண்ட தமிழ்த் தேசிய படையாக வளர்ந்துள்ளது.

இன்று நாம் ஒருமுழுமையான கரந்தடிப்படை அல்ல. அதே வேளை நாம் நிரந்தரப் படையுமல்ல;

இந்த இரண்டிற்கும்இடைப்பட்ட ஒரு வளர்ச்சிக் காலத்தில் நாம் நிற்கிறோம்.

இன்று தமிழீழம் இந்த

(3ஆம் பக்கம் பார்கக)

## நாவாந்துறையில் நேற்று பொம்மர் திடீர் தாக்குதல்

யாழ்ப்பாணம், செப். 7

யாழ். கோட்டை இராணுவ முகாமுக்கு நேற்று மாலை ''அவ்ரோ'' உணவுப் பொருள்களைப் போட, இரண்டுபொம்மர்கள் வானில் நெடுநேரம் சுற்றியபடியே இருந்தது;

இந்த பொம்மர்களில்ஒன்று நாவாந்துறைப் பகுதியை நோக்கி திடீரெனக் குத்திப் பதிந்து தாக்குதல் நடத்தியது.

மக்கள் கூடியிருந்த மீன் சந்தைப் பகுதியை நோக்கியே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. இச்சம்பவத்தில்மீன் வியாபாரி ஒருவர் படுகாயமடைந்தார்.

காயமடைந்தவர் கொட்டடியைச் சேர்ந்த கந்தையா சுப்பிரமணியம் (வயது 51) என்பவர் ஆவார்.

பெரும்பாலோர் பதுங்கு குழிக்குள் ஓடி ஒளிந்துகொண்டதால், தப்பிவிட்டனர்.

பொம்மர் தாக்குதலில் இப்பகுதியில் சில கடைகளும், வீடுகளும் சேதமுற்றன. (ஒ-15)

## மன்னார் கடலில் கண்ணிகள்! படையினர் வைப்பதாக தகவல்

கொழும்பு, செப். 7

மன்னார் வளைகுடாக் கடலில் கண்ணிவெடிகளை இலங்கைக் கடற்படை வைத்து வருவதாகவும் —

விடுதலைப் புலிகளுக்கு வெளியில் இருந்து ஆயுதங்கள் வருவதைத் தடுக்க இலங்கை கடற்படை இதில் ஈடுபட்டு வருவதாகவும் —

தமிழ் நாடு சென்ற இலங்கைத் தமிழ் அகதிகள் தெரிவித்தனர் என்று ஏஜன்சிச் செய்திகள் தெரிவித்தன.

# வடக்கில் நீண்டகாலப் போர் நடத்த திட்டமிடுகிறார் ரஞ்சன்

கொழும்பு, செப். 7

வடக்கில் நீண்டகாலப் போரை நடத்தத் தாம் திட்டமிட்டு வருவதாக பாதுகாப்புத் துணை அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்தினா தெரிவித்துள்ளார்.

நேற்று நடந்த வாராந்தச் செய்தியாளர் மாநாட்டில் அவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

அவர் அப்போது மேலும் கூறியதாவது: —

வடக்கில் நீண்டகாலப் போரை நடத்தத்திட்டமிட்டு வருகிறோம்.

இதற்காக விடுதலைப்புலிகள் வெடிவைத்துத் தகர்த்த பாலங்கள், மதகுகளை நாம் திருத்தி வருகிறோம்.

யாழ் - கோட்டையை அரசு கைப்பற்ற முன்புதிட்டமிட்ட காலத்திலும் பார்க்க அதிக காலம் பிடிக்கும்.

பொலீஸாரும், இராணுவத்தினருமாக சிக்கியுள்ள கோட்டை முகாமுக்கு செல்லும் பாதையில் ஏராளமான கண்ணிவெடிகள் உள்ளன.

(3ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

**இராவணன் கோட்டை**

மாயாஜால மந்திரதந்திர வீரதீரச் செயல்கள் நிறைந்த சிறுவர் நவீனம் 20/- ரூபா துர்க்கா ஸ்ரேசனேர்ஸ் சுன்னாகம், லக்கி புத்தகசாலை பண்டத்தரிப்பு, திருக்கணித. சிவம் புத்தகசாலைகள் சாவகச்சேரி, ஸ்ரீகாந் புத்தகசாலை நல்லூர்.

(14133)

**Dilka Watch Works**

தமிழ்நாட்டில் நல்ல விலைக்கு விற்பனை செய்யக்கூடிய சிற்றிசன், அல்பர், கசியோ கடிகாரங்கள் விற்பனைக்கு உண்டு. சகல கடிகாரங்களும் திருத்திக்கொடுக்கப்படும். டில்கா, வாச் வேக்ஸ், குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம். [14129]

### இடமாற்றம்

**RATHY WATCH WORKS**

மேற்படி ஸ்தாபனம் 12, பொன்னையா லேன் (உபதபால் நிலைய அருகாமையில் பிடாரி கோவிலடி) ஆறுகால் மடம் ஆனைக்கோட்டை யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் இயங்குகிறது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகிறோம். இங்கு திருத்த வேலைகள் மணிக்கூடு பற்றறி, விற்பனைகள் நடைபெறுகின்றது என்பதையும் அறியத்தருகிறோம். [13937]

அரஸ் ஜவுளியகம் இல: 146 நவீன சந்தை, யாழ்ப்பாணம் மண்டேலா ரேடர் (புத்தகசாலை) இல, 2, பஸ்நிலையம் ஆஸ்பத்திரிவீதி யாழ்ப்பாணம் ஆகியன தற்போது இல, 256, பருத்தித்துறை வீதி, (நல்லூர் தேரடி முன்பாக) நல்லூர் யாழ்ப்பாணம் என்ற முகவரியில் இயங்குகின்றன என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். [13938]

### தவறிவிட்டது

நடராஜா ரங்கநாதன் கொக்குவில் மேற்கு நாகலிங்கம் வீதியைச் சேர்ந்த என்னுடைய அடையாள அட்டை இல. 661961309V காங்கேசன்துறையிலிருந்து கொக்குவிலுக்கிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேற்கண்ட விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (14146)

3/393 இலக்கமுடைய மொறிஸ் ஒக்ஸ்போட் காரின் புத்தகம் இருமாதங்களுக்கு முன் கந்தரோடையில் தவறிவிட்டது. எடுத்தவர்கள் திருமதிசெல்லத்துரை சிவநாயகம் கந்தரோடை சுன்னாகம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும். (14149)

# இடைக்கால நிர்வாகம் வேண்டும்

கொழும்பு, செப். 7

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இடைக்கால நிர்வாகம் ஒன்றை ஏற்படுத்தும் படியும் —

கடந்த மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்ட கட்சிகள் அனைத்துக்கும் அந்த நிர்வாகத்தில் இடமளிக்கப்பட வேண்டும் என்றும் ஈ. என். டி. எல். எப். இயக்கம் ஜனாதிபதியைக் கடிதமூலம் கோரியுள்ளது. [ஒ-எ]

## முதலுதவி சிகிச்சை நிலையம்

சாவகச்சேரி, செப். 7

சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் இயங்கும் அகதிகள் தகவல் நிலையத்துடன் ஆரம்ப சுகாதார முதலுதவிச்சிகிச்சை நிலையம் ஒன்றும் இயங்க ஆரம்பித்துள்ளது.

இந்நிலையம் 24 மணிநேர சேவை ஆற்றி வருகிறது.

# அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு உணவு எடுத்துவர அனுமதியில்லை!

யாழ்ப்பாணம், செப். 7

அரச சார்பற்ற நிறுவனங்கள் வடக்குக்கு உணவுப் பொருள்களைக் கொண்டு வருவதற்கு அனுமதி மறுக்கப்பட்டுவருவதாகத் தெரிய வந்தது.

சர்வதேச அமைப்புக்களின் உதவியுடன் இயங்கும் பல நிறுவனங்கள் வடக்குக்கு உணவுப் பொருள்களை அனுப்புவதற்காக பொருள்களைக் கொள்வனவு செய்து கொழும்பில் வைத்துள்ளன.

அந்தப் பொருள்களை கப்பல் மூலமாகவோ, வாகன அணி மூலமாகவோ இங்கு அனுப்ப அவை முயற்சி மேற்கொண்டுள்ளன.

ஆனால் அரசு அனுப்பும் பொருள்களுக்கே முன்னுரிமை அளிக்கப்படும். இந்த அமைப்புக்களின் பிரதி நிதிகளிடம் தெரிவிக்கப்பட்டிருக்கிறதாம்.

இந்த அமைப்புக்களின் கிளைகள் யாழ்ப்பாணத்தில் இயங்குகின்றன. அவை அகதி முகாம்களைப் பராமரித்தும் வருகின்றன. அவற்றுக்குரிய அத்தியாவசியப்பொருள்கள் இங்கு வந்து சேராமையால் அவை முகாம்களை பராமரிக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றன.

இந்த அமைப்புக்களின் தலைமையகங்கள் அத்தியாவசியப் பொருள்களை கொழும்பிலிருந்து வடக்கே அனுப்புவதற்கு கூட்டுப்படை தலைமையகத்திடம் அனுமதி கேட்டால், செஞ்சிலவச்சங்க சர்வதேசக் குழுவிடம் கேட்குமாறு தெரிவிக்கப்படுகிறதாம்.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவிடம் கேட்டால் முன்னுரிமை அடிப்படையில் அனுமதி வழங்கப்படும் என்று அந்த அமைப்புகளுக்குத் தெரிவிக்கப்படுகிறதாம். (உ-3)

## எமது வாடிக்கையாளருக்கு முக்கிய அறிவித்தல்

கடந்த காலங்களில் எமது ஸ்தாபனத்தில் திருத்துவதற்கோ அல்லது புதிதாக செய்வதற்கோ எம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பொருட்கள் அனைத்தையும் 20-09-1990 இற்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். இத் திகதிக்கு பின் பெற்றுக் கொள்ளாவிட்டால் நாங்கள் பொறுப்பாளிகள் அல்ல.

பெற்றுக் கொள்ளும் நேரம்:
**காலை 9. 00 மணிமுதல் பிற்பகல் 3.00 மணி வரை.**

**நோத் அயன் என்ஜினியர்ஸ்,**
**45, வெங்கடேசன் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

இங்ஙனம்;
உரிமையாளர்.

(14148)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்:
30 - 11 - 1938

மறைவு:
08 - 08 - 1990



### கிருஷ்ணர் இரத்தினசபாபதிப்பிள்ளை

(பொலிஸ் உத்தியோகத்தர், யாழ்ப்பாணம், 4672)

என் அன்புத் தெய்வமே! குடும்பத்தின் ஒளிவிளக்காய், அயலவர் நண்பனாய், பிள்ளைகள் நல்வழி காட்டியாய், வாழ்ந்து, மறைந்து 07 - 09 - 90 இல் 31 நாட்கள் ஆகுகின்றன. உங்கள் நினைவு என்றென்றும் மறையாது.

அத்துடன் எனது கணவரின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் உதவி செய்த உற்றார், உறவினர்கட்கும், நண்பர்களுக்கும் எனது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொண்டு அந்தியேட்டிக்கிரியைகளில் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றோம்.

திருமதி இ, ஞானம்பிகாவதி.

கல்லை வேம்படி,
சுழிபுரம்.

(14147)

## மரண அறிவித்தல்

திருமதி
### அருந்தவராணி விஜயகுமார்

திருமதி வி. அருந்தவராணி (ஆசிரியை, கிளிநொச்சி ம. மா. வி தற்போது யாழ். யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை 31- 08- 1990 அன்று காலமானார், அன்னார் பூ. விஜயகுமார் (Foreman காகிதஆலை, வாழைச்சேனை) அவர்களின் அன்புமனைவியும் திரு. திருமதி க. சதாசிவம் (இளைப்பாறிய கட்டடப் பரிசோதகர் கல்வி இலாகா) அவர்களின் சிரேஷ்ட மகளும், குகநேசன், கலைவாணி (ஆசிரியை மகாஜனக் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் மானிப்பாய் கெல்லக்லேன் திரு. திருமதி பூபாலசிங்கம் (இளைப்பாறிய சிறாப்பர், இலங்கை வங்கி மட்டக்களப்பு) அவர்களின் அன்பு மருமகளும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் ராணி இல்லம் A. G. A. ஒழுங்கை தெல்லிப்பழையில் 31- 08- 90இல் நடைபெற்றது. உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்

பூ. விஜயகுமார்.

தெல்லிப்பழை (14144)

## வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

### காரியாலய இடம் மாற்றம்

வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச காரியாலயம் சுந்தரகிரி சங்கரப்பிள்ளை வீதி- ஆனைக்கோட்டை என்னும் முகவரிக்கு 10 - 09 - 90 தொடக்கம் மாற்றப்பட்டுள்ளது. என்பதை அறியத்தருகின்றோம். அன்றைய தினம் சமாச ஊழியர்கள் சகலரும் சமூகம் அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இங்ஙனம்
**வைத்திய கலாநிதி ஏ. எல். ஏபிரகாம்**
தலைவர்
வடமாகாண கடற்றொழிலாளர்,
கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

[சி-5185]

## வீர அஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



ஜனனம்:
06 - 09 - 1962

வீரமரணம்:
09 - 08 - 1990

### ★ மேஜர் ஜேம்ஸ் ★
(உ. ஸ்ரீதர் வல்வை)

நாதியற்ற நம் இனத்தின்
நலிவகற்ற நீ எழுந்தாய்
சாதி சனம வாழ்வு உயர
சாகும் வரை தோள் கொடுத்தாய்
நீதி இங்கே நெடிந்துயர
நெறிமுறைகள் வழி வகுத்தாய்
பாதி வழி நீ மறைந்தே
பாழும் துயர் கடலுள் மூழ்க வைத்தாய்

சத்தியம் விரைவாய் சபைதனில் முடிதரிக்கும்
சான்றோர் புடைசூழ செங்கோலும் தலைநிமிரும்
எத்திக்கும் எங்கள் கொடி வான் உயரும்
எதிர் சக்திகள் யாவையும் இல்லாதே அழியும்
முத்தமிழ் முன்போல் முளைவிட்டு வளரும்
முதுபெருங் கலைகளும் கிளை கொண்டு பரவும்
நித்திலத்தில் நம் துயரம் கனவாகி மறையும்
நீங்கள் வித்திட்ட சுதந்திரம்
விடுதலைப் பூக்களால் (நாளை) இங்கே மலரும்

எங்கள் அன்புப் புத்திரன் அகாலமரணமடைந்ததைக் கேள்வியுற்று மரணச் சடங்குகளில் பங்குபெற்ற அனைவர்க்கும் நன்றி தெரிவித்துக்கொண்டு எதிர்வரும் 08 - 09 - 90 சனிக்கிழமை காலை 6 00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற இருக்கும் அந்தியேட்டிக் கிரியையிலும் கலந்து சிறப்பிக்குமாறு உறவினர்கள், நண்பர்கள், இயக்கத் தோழர்கள், தோழியர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

பெற்றோர்,
சகோதரசகோதரிகள், மைத்துனர்கள்,
மருமக்கள்.

வல்வெட்டித்துறை. [14150]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு அகதி முகாமில்

# முப்பது குழந்தைகள் பலி!

## தொற்று நோய் மேலும் பரவும் ஆபத்து

மட்டக்களப்பு, செப். 7

கிழக்கிலங்கைப் பல்கலைக் கழக அகதி முகாமில் ஆயிரக் கணக்கில் தமிழ் அகதிகள் தஞ்சம் புகுந்துள்ளனர்.

அங்கு ஏற்பட்டுள்ள பல்வேறு தொற்று நோய்களினால் கடந்த மாத இறுதி வரை முப்பது குழந்தைகள் உயிரிழந்திருப்பதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

கொலரா, காய்ச்சல் போன்ற தொற்றுநோய்கள் முகாமில் உள்ள குழந்தைகளுக்குப் பரவி வருவதாகவும் -

போதிய உணவு, குடிநீர் மற்றும் மருத்துவ வசதிகள் இன்றி அகதிகள் சஷ்டப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அங்கு தொற்றுநோய் மேலும் பரவும் ஆபத்து ஏற்பட்டிருப்பதாகவும் - அஞ்சப்படுகிறது.

செங்கலடி முதல் கிரான் வரையான கிராமங்களைச் சேர்ந்தவர்களும் -

ஊறணி, தன்னாமுனை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களும் இம்முகாமில் தங்கியிருக்கின்றனர்.

கிழக்கிலங்கைப் பல்கலைக் கழகப் பேராசிரியை செல்வி. மனோ சபாரத்தினம் இந்த முகாமுக்குப் பொறுப்பாகச் செயற்பட்டு வருகிறார். (உ)

## வாராந்தம் வழங்கப்படும் நிவாரணப் பொருள்கள்

யாழ்ப்பாணம், செப். 7

குடாநாட்டில் நேற்று முதல் — அமுலுக்கு வந்த — இடம் பெயர்ந்தோர் மற்றும் வருமானம் இழந்தோருக்கான— நிவாரணப் பொருள்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் வாரம் தோறும் வழங்கப்படவிருக்கும் பொருள்களின் விவரம் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. அந்த விவரம் வருமாறு:-

★ ஒவ்வொருவருக்கும் 750 கிராம் அரிசி, 300 கிராம் மா, 300 கிராம் சீனி.

★ மூன்று பேருக்கு உட்பட்ட குடும்பங்களுக்கு 50 கிராம் பருப்பு, அதற்குக் கூடிய அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு 100 கிராம் பருப்பு.

★ ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு ஒரு ''லக்ஸ் பிறே'' பக்கெட்.

★ ஒரு குடும்பத்துக்கு —
- 50 கிராம் தேயிலை அல்லது கோப்பி.
- 50 கிராம் மல்லி.
- 25 கிராம் வீதம் சீரகம், பூடு, புளி.
- ஒரு ராணி சோப் அல்லது வொண்டர் லைட் சோப்.
- ஒன்பது மெழுகுதிரி
- இரண்டு தீப்பெட்டி.
- முன்னுரிமை அடிப்படையில் 100 மில்லிலீற்றர் மண்ணெண்ணெய்.

பங்கீட்டு அட்டைகளுக்கு அல்லது உதவி அரச அதிபர்கள் விநியோகிக்கும் விசேட பெர்மிட்டுகளுக்கு இலவசமாக இப்பொருள்கள் வாரந்தோறும் வழங்கப்படும் என்பது தெரிந்ததே. (உ-3)

## பொது இடம் ஒன்றில் வைத்தே யாழ் நகர தபால்கள் விநியோகம்

யாழ்ப்பாணம், செப். 7

யாழ் நகரப்பகுதிக்கான கடிதங்கள் எதிர்வரும் திங்கட்கிழமைக்கு முன்பாக பொது இடம் ஒன்றில் வைத்து வழங்கப்படும்.

கொழும்பில் இருந்து கப்பல் மூலமாக இரு தடவைகளில் கொண்டுவரப்பட்டு பருத்தித்துறையில் தேங்கிக் கிடந்த 534 தபால் பொதிகளும் தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க லொறிமூலம் சுன்னாகம் தபால் நிலையத்துக்கு எடுத்து வரப்பட்டுள்ளன.

யாழ். பிராந்திய தபால் அத்தியட்சகர் திரு.கே. கனகசுந்தரமும், சுன்னாகம் தபால் நிலைய அதிபர் திரு. இ. திருநாவுக்கரசுவும் தமது மேற்பார்வையில் இந்தத் தபால்களைத் தரம்பிரித்து - குடாநாட்டில் உள்ள தபால்களுக்கான பொதிகளை, அந்தந்தத் தபாலகங்களுக்கு உடனடியாக அனுப்பி வைத்தனர்.

நேற்று அந்த அந்தப் பகுதிகளில் தபால்கள் விநியோகிக்கப்பட்டன.

யாழ். நகரத்தபால்கள் மட்டும் ஒரு பொது இடத்தில் வைத்துத் தரம்பிரிக்கப்பட்டு திங்கட்கிழமைக்கு முன்பு அங்கு வைத்தே பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ் தபாலகப் பகுதியில் வேலை செய்யக்கூடிய சூழ்நிலை இல்லாததாலேயே இந்த ஏற்பாடு என்றும் அறிய வந்தது.

அதே நேரம் -

யாழ் குடாநாட்டுக்குப் பொதுவாக முகவரியிடப்பட்டு வந்த- 334 பொதிகளில் உள்ள - தபால்களை தரம் பிரிக்கும் வேலைகள் தற்போது சுன்னாகம் தபாலகத்தில் நடைபெற்று வருகின்றன. (உ - 3)

## வேலணை ஆஸ்பத்திரி மீண்டும் இயங்க ஆரம்பம்

இராணுவ நடவடிக்கைகளை அடுத்து மூடப்பட்ட வேலணை ஆஸ்பத்திரி நேற்று முதல் மீண்டும் திறக்கப்பட்டுள்ளது. அங்கு ஒரு சில வைத்தியர்கள் சேவையாற்றுவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆஸ்பத்திரிக்குத்தேவையான ஓரளவு மருந்துகள் மற்றும் மண்ணெண்ணை போன்றவற்றைத் தாம் அனுப்பியுள்ளதாகச் செஞ்சிலுவைச் சங்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## முல்லைத்தீவு......

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பட்டன.

ஒன்பது ஹெலிகளிலும், நான்கு பீரங்கிப்படகுகளிலும் துருப்புக்கள் தரையிறக்கப்பட, அவற்றுக்குப் பாதுகாப்பாக, ஆறு பொம்மர்கள், இரண்டு சீ-பிளேன்கள், ஒரு 'அவ்ரோ' ஆகியவை தாக்குதலை நடத்தின.

கடல்மார்க்கமாக பீரங்கிக் கப்பல்கள் மூலம் துருப்புக்களுடன் கவசவாகனங்களும் தரையிறக்கப்பட்டன.

தரை இறங்கிய இராணுவம் முல்லைத்தீவு இராணுவ முகாமை நோக்கி முன்னேறும் முயற்சியாக தரைப்பகுதியை நோக்கி ஷெல், பீரங்கித்தாக்குதல்களை நடத்தியது. அவ்வேளை கடும் விமானத் தாக்குதலும் நடத்தப்பட்டது.

இந்தத் தாக்குதல்களினால் முல்லைத்தீவு நகரம், சிலாவத்தை, முள்ளிவாய்க்கால், தண்ணீரூற்று ஆகிய பகுதிகளில் வீடுகள், கடைகள், கோயில்கள், பொது இடங்கள் உட்பட நூற்றுக்கணக்கில் கட்டடங்கள் சேதமாகின.

அதன் பின்னர் முல்லைத்தீவு இராணுவ முகாமை நோக்கி முன்னேற முயன்ற படையினரை வட்டுவாவல் பாலத்தடியில் வைத்து புலிகள் வழிமறித்துத் தாக்கினர்.

இந்த நேரடி மோதல்களின் போதே புலிகள் தரப்பில் போராளிகள் வீரமரணம் அடைந்தனர்.

கடும் சண்டையை தொடர்ந்து ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணியளவில் பலத்த இழப்புகளுடன் துருப்புக்கள் முல்லைத்தீவு முகாமிற்குள் போய்ச் சேர்ந்ததாக தெரிவிக்கப்பட்டது. (உ)

## வடக்கில்.....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதனாலேயே தாமதம் ஏற்படுகிறது.

எனினும் எமது படைகள் முன்னேறிக்கொண்டே இருக்கின்றன. நீண்டகாலப் போரை எமது படை மேற்கொள்ளும். எனினும் காலப் போக்கில் யாழ்ப்பாணம் கோட்டையை நாம் பிடித்து விடுவோம்— என்றார் அமைச்சர்.

சிலமணி நேரத்தில் யாழ். கோட்டையை பிடித்துவிடுவோம் என்று முன்னர் அமைச்சர் ரஞ்சன் தெரிவித்ததற்கு முரணாக இது அமைந்துள்ளது - என்றும்

விடுதலைப் புலிகளுடன் நீண்டகாலப் போருக்கு இராணுவம் தயாராகிறது என்று அமைச்சர் கூறியதன் மூலம் இராணுவத்தால் திட்டமிட்டது போல் விடுதலைப் புலிகளை பின்னடையச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாக சர்வதேசச் செய்தியாளர்கள் கூறுகின்றனர் என்று வெரித்தாஸ் வானொலி அறிவித்தது. (அ-எ)

## 50 லட்சம்.....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கப்பட்டுள்ளது.

செயலகத்துக்கு வழங்கப்பட்ட பணத்தில் செயலக ஊழியர்களுக்கு சம்பளமும், உணவு விநியோகம் செய்யும் வர்த்தகர்களுக்கு எட்டு லட்சம் ரூபாவும், மீதியான பணம் மாதாந்த அரசாங்க உதவி பெறுபவர்களுக்கும் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

அடுத்த வாரமும் கொழும்பில் இருந்து கப்பல் மூலம் பணம் அனுப்பப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ-3-100)

## வீரமரணமடைந்தோர்

யாழ்ப்பாணம், செப். 7

முல்லைத்தீவில் இடம்பெற்ற நேரடி மோதலில் வீரமரணமடைந்த 36 போராளிகளின் பெயர், விவரம் வருமாறு:—

★ மேஜர் ரட்ணம் — [முரசுமோட்டை]
★ லெப். அன்ரன் — [ஒட்டங்குளம்]
★ லெப். கரன் — [கிளிநொச்சி]
★ லெப். அகிலன் [கிளிநொச்சி]
★ லெப். பொஸ்வின் [உயிலங்குளம்]
★ லெப். மென்டிஸ் [ஜெபதீஸன் - மன்னார்]
★ 2 ஆவது லெப். அசோக் [இதயச்சந்திரன் ஒட்டுமடம்]
★ 2ஆவது லெப். கனோஜி [பா. கமலநாதன் புளியம் பொக்கணை]
★ 2 ஆவது லெப். வசி [மல்லாவி]
★ 2 ஆவது லெப். சாரதி [மல்லாவி]
★ 2 ஆவது லெப். மிரேஸ் [செல்வராசா - சிறீதரன் கொக்கிளாய்]
★ 2 ஆவது லெப். கபில்தேவ் [வைரமுத்து கலாநாதன்- பழுகாமம் மட்டக்களப்பு]
★ 2 ஆவது லெப். சுந்தர் [சித்திரவேல் கஜேந்திரராசா- சம்பூர்]
★ 2 ஆவது லெப். ஆண்டவன் [செல்வராசா ஜெயபாஸ்கரன் மல்லாகம்]
★ 2 ஆவது லெப். பிரசாத் [சிவரட்ணம் சிறீகுமார் - மானிப்பாய்]
★ நிக்கலஸ் [கனகரத்தினம் விஜயன் - ஏறாவூர்]
★ நிக்கலஸ் [நாகராஜா சங்கர் - ஏறாவூர்]
★ ஆப்தீன் [பாலசிங்கம் மோகனதாஸ் - கொக்குவில்]
★ ரஜன் [முத்துவேல் சௌந்தரராஜன் - மூதூர்]
★ குழந்தை [யோகரட்ணம் அல்பிரட் பாலசிங்கம் - இளவாலை]
★ ஜலின் [முகமது மன்சூர் - ஏறாவூர்]
★ றணிஸ் [சிவயோகநாதன் சுஜிகரன் - கல்வியங்காடு]
★ மூர்த்தி [தம்பிராசா அனிதராஜா - பருத்தித்துறை]
★ துஸ்யந்தன் [சின்னராசா உதயராசா - வல்வெட்டித்துறை]
★ சர்வேஸ் [லச்சுமணன் முகன் துணுக்காய்]
★ லிங்கேஸ் [வெள்ளைத்தம்பி சதீஸ்குமார் - சாம்பல்தீவு]
★ அலங்கன் [கந்தையா சிவராஜா - மல்லாவி]
★ இல்மன் [அரியரத்தினம் ஜீவரத்தினம் - ஓமந்தை]
★ வித்தி [சபாரட்ணம் ஜீவரத்தினம் - பூநகரி]
★ ரவி [உடையார்கட்டு]
★ மன்மதன் [வவுனியா]
★ நித்தி [கிளிநொச்சி]
★ சுகுமார் [வவுனியா]
★ அமலன் [சிவலிங்கம் சிறீச்சந்திரன்—குமுழமுனை]
★ சிறீ [ஒதியமலை]
★ சஞ்ஜீவி [ஊர்காவற்றுறை]

(உ)

## எதிரியின் ஆயுதங்களை....

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

இரண்டிற்கும் இடைப்பட்ட வித்தியாசமான, வேறுபட்ட, ஆனால் வளர்ச்சி பெற்ற ஒரு போராட்டத்தைச் சந்திக்கின்றது.

சிங்களக் காவல்துறையினர் தமிழர் வீடு புகுந்து கைது செய்தது ஒரு காலம். பின் சிங்கள இராணுவத்தினர் வீடு புகுந்து கைது செய்து, சுட்டு தெருவில் பிணமாக வீசிச் சென்றது ஒருகாலம்.

பின் பாரிய வாகனங்களுடன் வந்து எமது மக்களைத் தேடி அறிந்தது ஒரு காலம்.

இன்று, குண்டு வீச்சு விமானங்களோடும், பாரிய கனரக வாகனங்களுடனும் வந்து எம்மை அழிக்கப் பயந்து நிற்கும் காலம்.

முகாம்களை விட்டு வெளியேறி தேடி அழிக்க வந்த சிங்களப்படையை நாம் தாக்கியது ஒரு காலம்.

இன்று, படை முகாம்களுக்குத் தேடிச் சென்று அவர்களை அழிக்க முயலும் காலம்.

முன்பு சிங்களப்படை எம்மைத் தேடி வந்த போது, அழிவைச் சந்தித்தது.

இப்போது தாங்கள் இருக்கும் இடத்திலும் அழிவுவரும் என உணர்ந்துள்ள காலம்.

இன்று, சிங்களப்படை ஆக்கிரமித்து நிற்கும் தமிழீழத்தின் ஒவ்வொரு அங்குல நிலத்திற்கும் - நாளொன்றுக்கு ஆறுகோடி ரூபா செலவழித்து- தனது பக்கத்தில் பெரும் இழப்புகளோடு யுத்தம்புரிந்துகொண்டிருக்கிறது.

எவ்வளவோ, இழப்புக்களுக்குப் பின்பு ஆக்கிரமித்த அந்தப் பகுதிகளை கட்டிக் காக்க, அதற்கு மேல் பல மடங்கு இழப்புகளை சிங்களப்படைகள் சந்திக்கவேண்டியுள்ளது.

எவ்வளவே இழப்புகளுடன் கைப்பற்றிய எமது மண்ணின் ஒரு சிறிய பகுதியைக் கூட சிங்களப்படைகள் கைவிட்டுச் செல்ல வேண்டியுள்ளது.

சிறிலங்காவின் தேசிய படைக்கும், தனது விடுதலைக்காகப் போராடும் தமிழீழத்தின் தேசிய விடுதலைப் படைக்கும் பெரும் போர் தமிழீழம் எங்கும் நடக்கிறது. இப் போரின் தாக்கத்தை சிறீலங்கா அரசு விரைவில் சந்திக்கும்.

நாம் தனித்து நின்று— எந்த ஒரு நாட்டின் உதவியும் இன்றி— எதிரியின் ஆயுதங்களைப் பறித்து அவற்றைக் கொண்டே எதிரியுடன் மோதுகின்றோம்.

நாம் நேருக்கு நேர் நின்று மோதி, எதிரியிடம் பெருமளவில் ஆயுதங்களைப் பறித்திருக்கின்றோம். பல எதிரி முகாம்களைத் தகர்த்திருக்கிறோம்.

வேறுபட்ட போராட்ட சூழலில் சிங்களப் படையோடு முல்லைத்தீவில் நேருக்கு நேர் நின்று மோதி, அதன் பயனாக எதிர்காலத்தில் எமது தமிழீழ மண்ணை விட்டு சிங்களப் படையை வெளியேற்ற வழியமைக்கும் முயற்சியில் கடந்த முதலாம், இரண்டாம் திகதிகளில் முல்லைத் தீவில் வீரமரணமடைந்த எமது 36 போராளிகளுக்கும் எமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## பொம்மர்களின் அரவணைப்பு

யாழ்ப்பாணம், செப். 7

நேற்றுமாலை யாழ். நகரில் தமது வழமையான 'பணி'யை முடித்துக் கொண்ட அவ்ரோவும், இரு பொம்மர்களும் ஆனைக்கோட்டை, மானிப்பாய்ப் பகுதிகளில் சாகசம் புரிந்தன.

இப்பகுதிகளுக்கு மேலாக இவை மூன்றும் பார்ப்பதற்கு ஒன்றினை ஒன்று அரவணைத்துச் செல்வது போன்று- மிக நெருக்கமாக சரிந்தும் வளைந்தும் சாகசம் காட்டிச் சென்றன. (ஒ-5)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பெல்ஜியம் செஞ்சிலுவை அதிகாரி சேதங்களைப் பார்வையிட்டார்

யாழ்ப்பாணம், செப். 7

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் ஏற்பட்ட சேதங்கள் குறித்து பெல்ஜியம் செஞ்சிலுவைச்சங்க அதிகாரி செல்வி அல்ஸ் நேரில் பார்த்து விவரங்களைச் சேகரித்தார்.

நேற்றுக் காலை யாழ்ப்பாணம் வந்த அவர் ஆயர் இல்லத்துக்குச் சென்று ஆயரிடம் விவரங்களைக் கேட்டறிந்தார். சேதமடைந்த ஆயர் இல்லத்தை பார்வையிட்டதுடன் படங்களும் எடுத்துக் கொண்டார்.

குருநகர் உட்படப் பலபகுதிகளிலும் குண்டு வீச்சால் சேதமடைந்த பகுதிகளையும் அவர் பார்வையிட்டார்.

அகதிமுகாம்களுக்கும் அவர் விஜயம் செய்தார். முக்கிய பிரமுகர்களுடன் அவர் பேச்சும் நடத்தினார். (ஒ-3-7)

# ஆகஸ்ட் மாத ஓய்வூதியத்தை பணமாக வழங்க முயற்சி

யாழ்ப்பாணம், செப். 7

யாழ். மாவட்ட ஓய்வூதியர்களுக்கான ஆகஸ்ட் மாத வவுச்சர்கள் வந்து சேர்ந்த போதும், பணம் வந்து சேராததால் கொடுப்பனவு செய்ய முடியாதுள்ளதாக செயலக ஓய்வூதியக் கிளை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஜூலை மாதத்துக்கான வவுச்சர்கள் கிடைத்ததும் வங்கிகள் செயல்படாததால், பல ஓய்வூதியர்கள் இன்னும் அவற்றை பணமாக்க முடியாதுள்ளனர்.

இதானல் ஆகஸ்ட் மாதத்துக்குரிய கொடுப்பனவைப் பணமாக வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ஒ-3-100)

# ஈழத் தமிழருக்கு ஆதரவாக சென்னையில் அ.தி.மு.க. மறியல்

## திருநாவுக்கரசு உட்பட எண்மர் கைது

சென்னை, செப். 7

ஈழத் தமிழர் பிரச்சினை குறித்து நேற்று சென்னையில் உள்ள இலங்கைத் துணைத் தூதரக அலுவலகம் முன்பாக திருநாவுக்கரசு தலைமையிலான அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களும் தொண்டர்களும் மறியல் செய்ய முயன்றனர்,

அப்போது திரு. திருநாவுக்கரசு உட்பட ஏழு எம்.எல். ஏக்களும் பல தொண்டர்களும் கைதுசெய்யப்பட்டனர்.

இலங்கையில் அரசுப்படைகள் தமிழர்களைக் கொல்வதைக் கண்டித்தும், இலங்கைத் தமிழர்களைப் பாதுகாக்க இந்திய மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரியும் இவர்கள் மறியல் செய்ய முயற்சித்தனர். (ஒ-எ)

# மரண அறிவித்தல்கள்

## ஏகநாதன் விஜயானந்தா

(யாழ் இந்துக்கல்லூரி உயர்தரவகுப்பு மாணவன்)

ஏகநாதன் விஜயானந்தா (யாழ். இந்துக்கல்லூரி உயர்தர வகுப்பு மாணவன் அகால மரணமானார். அன்னார் நயினாதீவைச் சேர்ந்தவரும், காரைநகரில் வசிப்பவருமாகிய இளையதம்பி ஏகநாதன் (சட்டத்தரணி), சகுந்தலாதேவியின் அன்பு மகனும், சிவானந்தா, வருணானந்தா, பவானந்தா, ஜெயந்தி ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார். ஈமக்கிரியைகள் 7-9-90 காலை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 10-00 மணிக்கு காரைநகர் சாம்பலோடை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்;

நீலிப்பந்தனை,
காரைநகர் வடக்கு.

தகவல்:
இ, ஏகநாதன்
(13945)

## திரு. மு. பொன்னுத்துரை

நொச்சியாகம பிரபல வர்த்தகரும், புளியங்குளம் ஆறுமுகநாவலர் பண்ணை ஸ்தாபகரும், காரை, ஈழத்து சிதம்பர திருப்பணிச் சபைத் தலைவருமான திருவாளர் மு. பொன்னுத்துரை 3 - 9 -90 இல் புளியங்குளத்தில் காலமாகிவிட்டார். அன்னார் சரஸ்வதியின் அன்புக் கணவரும், சிவபாக்கியம், ஜெயலச்சுமி ஆகியோரின் தந்தையும், மு. கந்தையா, மு. சிதம்பரப்பிள்ளை (பிரபல வர்த்தகர் நொச்சியாகம) ஆகியோரின் அன்புச் சகோதரரும், கந்தசாமி, பரமநாதர் ஆகியோரின் மாமனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 4- 9- 90 இல் புளியங்குளத்தில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்;
மு. சிதம்பரப்பிள்ளை.

அறுகம்புலம்,
காரைநகர்.
(13944)

இப்பத்திரிகை நியூ உதயன் "பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 07-09-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

# இலங்கையில் வெளிச் சக்திகள்; இந்தியா உன்னிப்பாக கவனிக்கிறது

புதுடில்லி செப். 7

இலங்கையில் வெளிச் சக்திகள் இயங்குவது பாரதத்தின் பாதுகாப்பிற்கு ஊறு விளைவிக்கும் என இந்தியா இலங்கையிடம் எடுத்துரைத்துள்ளது.

இவ்வாறு வெளிவிவகார துணைஅமைச்சர் திரு, ஹரிகிஷன் சிங் நேற்று லோக சபையில் தெரிவித்தார்.

உள்நாட்டுப்போரில் ஈடுபடுவதாகக் கூறிக்கொண்டு இலங்கை, பாகிஸ்தான் உட்பட பல நாடுகளிடம் ஆயுத உதவி கோரியிருப்பது இந்தியாவுக்கு தெரியும். இலங்கையில்வெளிச் சக்திகள் ஈடுபடுவதை இந்தியா அனுமதிக்காது என்றும் இலங்கைக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. இது விடயத்தை இந்தியா மிக உன்னிப்பாகக் கவனித்து வருகிறது—

இலங்கை அரசு இப்போது தொடர்ந்து நடத்தும் உள்நாட்டுச் சண்டையினால் பாரதூரமான பல விளைவுகள் ஏறபடலாம் என்று இந்தியா எடுத்துக் கூறியுள்ளது.

யுத்தத்தை நிறுத்தி பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைகளைத் தீர்க்குமாறு இருதரப்பாருக்கும் இந்தியா வேண்டுகோள் விடுத்துள்ளது.

தமிழர்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் விதத்தில் இலங்கையின் ஒருமைப்பாட்டைப் பாதிக்காத விதத்தில் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்று நாம் கூறியுள்ளோம் — என்றும் துணை அமைச்சர் சொன்னார். (அ-5)

# தென்பகுதிக் காடுகளில் 'பங்கர்'கள்! கெரில்லா பயிற்சி!!

கொழும்பு, செப். 7

மாத்தறை மாவட்ட எல்லேவல காட்டுப் பகுதிகளில் ஜே. வி. பி. தீவரவாதிகள் கெரில்லா பயிற்சி மற்றும் யுத்தப்பயிற்சி போன்றவற்றில் ஈடுபட்டுவருகின்றனர் எனத் தெரியவருகிறது.

அங்கு பாதுகாப்புக்காகப் பதுங்குகுழிகளையும்('பங்கர்' களையும்) தீவிரவாதிகள் அமைத்துள்ளனர். மரங்களின்மேல் பலம் வாய்ந்த 'சென்றி'கள் அமைக்கப்பட்டுள்ளன.

அண்மையில் இந்தக் காட்டுப்பகுதிகளைப் பொலீஸார் சுற்றி வளைத்தபோது இருதரப்பினருக்கும் இடையே பெரும்சண்டை மூண்டது. பின்னர் தீவிரவாதிகள் ஓடித் தப்பிவிட்டனர்.

அங்கு துப்பாக்கிகள், இராணுவச் சீருடைகள், மருந்துகள், உடைகள் போன்றவை கண்டுபிடிக்கப்பட்டதாகப் பொலீஸார் தெரிவித்றனர்.

பலம்வாய்ந்த சென்றிகள், 'பங்கர்'கள் போன்றவை காணப்பட்டதாகவும் பொலீஸார் கூறினர். (ஒ-3)

## இரத்தம் தேவை

யாழ்ப்பாணம், செப். 7

மானிப்பாயில் இயங்கும் யாழ் போதனா வைத்தியசாலையின் இரத்தவங்கியில் போதிய இரத்தம் கையிருப்பில் இல்லை என்று அதிகாரி ஒருவர் தெரிவித்தார்,

பொதுமக்கள் இரத்ததானம் செய்து உயிர்களைக்காப்பாற்றுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. [ஒ-5]

# மண்டைதீவு ராணுவத்துக்கு கப்பலில் உணவுப் பொருள்

மண்டை.தீவில் முகாமிட்டிருக்கும் இராணுவத்தினருக்குத் தேவையான உணவுப் பொருள்களும் கப்பல் மூலம் எடுத்து வரப்பட உள்ளன,

600 மெற்றிக் தொன் பொருள்களுடன் ''அமெசன்' என்னும் கப்பல் இன்னும் சில தினங்களில் வடக்கு நோக்கிப் புறப்பட இருப்பதாகத் தெரியவருகிறது.

நடுக்கடலில் கப்பல் தரிக்கப்பட்டு கடற்படையினரின் உதவியுடன் பொருள்கள் இறக்கப்படும் என அறிய வருகிறது.

இந்தக் கப்பலில் கொண்டுவரப்படும் உணவுப் பொருள்களின் ஒரு பகுதி தீவுப்பகுதி மக்களுக்கு விநியோகிக்கப்படக் கூடும் எனவும் பேச்சடிபடுகிறது. [ஒ-5]

## வாகனத்தை கலைத்து ஹெலி தாக்கு

யாழ்ப்பாணம், செப் 7

கொடிகாமம் பகுதியில் நேற்று முன்தினம் (புதன்) வாகனம் ஒன்றை ஹெலி கலைத்துக் கலைத்துத் தாக்கியது.

ஹெலி றொக்கட் தாக்குதல் நடத்திய போதிலும் இலக்கு தவறிவிட்டது. அதை அடுத்து வேட்டுக்களைத் தீர்த்தது.

இச்சம்பவத்தில் இருவர் காயமுற்றனர், [ஒ]

## 6 லொறிகளில் அகதிகளுக்கு உணவு

யாழ்ப்பாணம், செப். 7

யாழ். மாவட்டத்தில்உள்ள அகதிகளுக்கு வழங்க கொழும்பில் இருந்து தென்னிந்திய திருச்சபை ஆறு லொறிகளில் உணவுப் பொருள்களை நேற்றுக் கொண்டுவந்தது.

மா, சீனி, அரிசி, பால்மா போன்ற அத்தியாவசியப் பொருள்களே கொண்டுவரப்பட்டன.

வண. பிதாக்கள் பிறேம் ராஜ், தேவானந்தா, ஜெயநேசன் ஆகியோர் இந்தப் பொருள்களைக் கொண்டு வந்தனர். (ஒ-3-7)

## கோப்பாயில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம் செப்.7

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மண்டபத்தில் நாளை சனிக்கிழமை காலை 10மணிக்கு உதவி அரச அதிபர்கள், கிராம சேவையாளர்கள் கலந்து கொள்ளும் கலந்துரையாடல் ஒன்று நடைபெற உள்ளது.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி ஏற்பாடு செய்துள்ள இந்தக் கலந்துரையாடலில் தென்மராட்சி, வலிகாமம் பகுதிகளைச் சேர்ந்த உ. அ. அதிபர்கள், கி சேவையாளர்கள் அனைவரையும் பங்குபற்றுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (ஒ)

## போராளிகள் மூவர்வீரமரணம்

யாழ்ப்பாணம், செப். 7

நேற்று முன்தினம் [புதன்] கோட்டை இராணுவத்தினருடனான மோதலில் ரிசான் (செல்லையா சத்தியசீலன், மாதகல்) என்ற போராளி வீரமரணமடைந்தார்.

இதே இராணுவத்தினருடன் கடந்த முதலாம் திகதி நடந்த மோதலில் காயமடைந்திருந்த கேமநாத் [ஏகநாதன் விஜயானந்தா- காரைநகர்] நேற்றுவீரமரணமடைந்தார்.

பலாலி, மயிலிட்டிப் பகுதியில் காவல் கடமையில்இருந்த இளம் புலி கமல் ஷெல் தாக்குதலுக்கு இலக்காகி நேற்று மரணமானார்.

இவர்கள் மூவரது புகழுடம்புகள் இன்று அவர்களது சொந்த இடங்களில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, மாலை தகனம் செய்யப்படும். [ஒ]

# அதிகாலை வேளையில் லொறிகள் மீது தாக்குதல்!

## சுண்டிக்குளத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம், செப். 7

வவுனியாவில் இருந்து உணவுப் பொருள்களை ஏற்றி வந்த லொறிகள் மீது நேற்று அதிகாலை 3 மணியளவில் கண்டாவளைக்கும் சுண்டிக்குளத்துக்கும் இடையில் ''சீ பிளேனில் இருந்து வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

'பரா' வெளிச்சக் குண்டுகளை ஏவி விட்டு 15 நிமிடத்துக்கு மேல் இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

எனினும் லொறியிலும் மற்றைய வாகனங்களிலும் வந்தவர்கள் சிறுகாயங்களுடன் உயிர் தப்பினர்.

இதே போன்று முன்தினம் அதிகாலையிலும் லொறிகள் மீது தாக்குதல் மேற் கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (உ-3)

# உலக அரசியலில் திடீர் திருப்பம்:

# பத்து வருடங்களின் பின்னர் ஈராக் மந்திரி ஈரானுக்கு!

ஈராக் வெளியுறவு அமைச்சர் தாரீக் அஸீஸ் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஈரான் தலைநகர் தெஹ்ரானுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொள்கிறார்.

இத்தகவலை ஈரானிய செய்தி ஸ்தாபனம் நேற்று வெளியிட்டது.

பத்து ஆண்டு காலத்தின் பின்னர் ஈராக் அமைச்சர் ஒருவர் ஈரான் விஜயம் செய்ய இருப்பது இதுவே முதல் தடவையென்று கூறப்பட்டது.

உலக அரசியலில் இந் நடவடிக்கை பெரும் திருப்பம் ஒன்றை ஏற்படுத்த இருப்பதாக அவதானிகள் கருத்துத் தெரிவித்தனர்.

இதே வேளை — ஐ. நா. சபையின் பொருளாதாரத் தடையினால் பாதிக்கப்பட்டுள்ள ஈராக்குக்கு உணவு மற்றும் மருத்துவ உதவிகளை வழங்க ஈரான் முன்வந்திருப்பதாக 'தெஹ்ரான் டைம்ஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டது. (ஒ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org